தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்
சென்னை – 25

**சுற்றறிக்கை எண் 125311/R1/2019**

**அங்கீகாரம் பெற்ற வணிகவியல் பயிலகங்களின் கவனத்திற்கு**

இத்துறையின் கீழ் இயங்கி வரும் அனைத்து அங்கீகாரம் பெற்ற வணிகவியல் பயிலகங்கள் 2020ம் ஆண்டில் அங்கீகாரம் தொடருவதற்கான பகுத்தாய்வுப் படிவத்தில் பின்வரும் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென தெரிவித்து 15.11.2019 அன்று இயக்ககத்தின் இணையதளத்தில் மூலம் வெளியிடப்பட்டது.

பகுத்தாய்வுப் படிவத்தில் வ.எண் II (1) ல் பயிலக கட்டட விவரங்கள் என்ற தலைப்பில் ஒரு சில கருத்துக்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. வ.எண் II (9)ல் மின் அளவீட்டு கட்டண அட்டை நகல் இணைக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. தங்கள் பயிலகத்தினை ஆய்வு செய்ய ஏதுவாக தங்கள் பயிலகம் அமைந்துள்ள இடத்தின் Google வரைபடம் (Latitude /Longitude) எண்கள் அடங்கிய நகல் கண்டிப்பாக இணைக்கவும்
2. First Aid Box உள்ளதா
3. தொழில் பரிந்துரை SSSBE சான்று பெறப்பட்டுள்ளதா

இத்துறையின் விளக்கவுரையில் எந்த ஆண்டுக்கு பயிலகத்தின் அங்கீகாரம் புதுப்பிக்க வேண்டுமோ அதற்கு முந்தைய ஆண்டு டிசம்பர் 1ம் தேதிக்குள் அங்கீகாரம் புதுப்பித்தல் விண்ணப்பங்கள் தேர்வு வாரியத்திற்கு கிடைக்குமாறு அனுப்ப வேண்டும் என உள்ளது. தற்பொழுது பகுத்தாய்வுப் படிவத்தில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் பத்து நாட்கள் நீட்டித்து 11.12.2019 தேதிக்குள் அங்கீகாரம் புதுப்பித்தல் விண்ணப்பங்கள் தேர்வு வாரியத்திற்கு கிடைக்குமாறு அனுப்ப வேண்டும் என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தொழில்நுட்பக் கல்வி ஆணையருக்காக